## R 5327 (page 299)

# மறதி நிர்மூலமாக்குதல் அல்ல

# OBLIVION NOT ANNIHILATION

**கேள்வி:** பாதாள (Hades) நிலைமையை மறதியின் நிலைமை அல்லது நிர்மூலமாக்கப்பட்ட நிலைமை என்று கூறலாமா?

**பதில்:** நிர்மூலமாக்கப்பட்ட நிலைமை, மனிதனின் மரண நிலைமையை குறிப்பது என்று கூறுவது சரியல்ல, இரண்டாம் மரணத்தைக் குறிக்க பயன்படுத்தலாம். நிர்மூலமாக்கப்பட்ட நிலைமை என்பது முற்றிலுமாக இல்லாமல் போவது. ஆகையால் பாதாள நிலைமையை குறிக்க நிர்மூலமாகுதல் என்ற வார்த்தையை பயன்படுத்துவது சரியல்ல. மறதி என்ற வார்த்தை, நிர்மூலமாக்குதல் என்பதைக் குறிக்காது. மறதி என்ற வார்த்தை முற்றிலுமாக உணர்வில்லாத நிலைமை. உதாரணமாக, ஒரு மனிதன் ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்றால் அவன் மறதியின் நிலைமைக்குச் செல்லுகிறான். நான் ஒரு மணி நேரமாக மறதியின் நிலைமையில் இருந்தேன் என்று அவன் கூறலாம். நடந்த எதையும் அவன் அறியாதிருந்தான்.

நாம் விசேஷமாக வேதாகமத்தின் வழியில் பேசும் போது, முடிந்த வரை சரியான வார்த்தையை பயன்படுத்தினால் குழப்பம் வராமல் தடுக்கலாம். வேதாகமமானது மிகவும் சிறந்த முறையில் எழுதப்பட்டிருக்கிறது. நமது பொதுவான மொழி பெயர்ப்பு மிகவும் அழகான மொழியாக இருக்கிறது. அதன் ஆங்கிலத்தில் அது மிகவும் நேர்த்தியாக இருக்கிறது. நாம் வேதாகம வார்த்தையை, வேதாகமம் பயன்படுத்துகிற வார்த்தையை நாம் பயன்படுத்தினால், நாம் தவறாக புரிந்து கொள்கிற ஆபத்தில் இருக்கமாட்டோம். நாம் பரந்த அளவில் இல்லை என்று ஒருவர் நினைத்தால், நாம் கர்த்தரின் வசனத்தை தவறாக புரிந்து கொள்ளுவதையும் தவறான விளக்கங்களையும் நாம் தவிர்த்திருக்கிறோம் என்பதை நாம் அறிகிறோம். ஆதேஸ் (Hades), ஷியோல் (Sheol) போன்ற வார்த்தைகள் பொதுவான மொழி பெயர்ப்பு வேதாகமத்தில் இல்லை. ஆனால் இவைகள் கடந்த சில பத்தாண்டுகளில் ஆங்கில மொழியில் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த வார்த்தைகளை பயன்படுத்துவது சரியானதாக இருக்கிறது. ஏனெனில் அவைகள் நமக்குரியதாக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**கேள்வி :** பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள இந்த சொற்றொடர்களுக்கு வித்தியாசமென்ன: “அவர்கள் இராதவர்களைப்போல இருப்பார்கள்" மற்றும் “அவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்” மற்றும் நிர்மூலமாக்குதல் என்ற வார்த்தை?

**பதில் :** இவைகளெல்லாம் ஒரே பொருளுடையவையாக இருக்கின்றன என்று புரிந்து கொள்ளுகிறோம். இந்த வேதவாக்கியங்கள் இரண்டாம் மரணத்தை மட்டுமே குறிக்கின்றன. மீட்பு இல்லாத முதல் மரணத்தை குறிப்பதற்கு கூட அவைகள் பயன்படுத்தப்படலாம். ஆனால் ஆரம்பத்திலிருந்து தேவனுடைய உத்தேசம் வேறாக இருக்கிறது. மீட்கும் விலை கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் "அவர்கள் இல்லாதவர்கள் போல இருப்பார்கள்" என்ற சொற்றொடர் முற்றிலுமாக விழுந்து போகக்கூடிய தற்காலத்தில் குறிப்பிட்ட முறைமைகளை குறிப்பதாக இருக்கலாம். அதே சொற்றொடர் மனுக்குலத்திற்கும் பயன்படுத்தப்படலாம். தற்காலத்தில் வேண்டுமென்றே

பாவம் செய்து இரண்டாம் மரணத்தில் மரிக்கிறவர்களும் ஆயிரம் வருட யுகத்தில் வேண்டுமென்றே பாவம் செய்து இரண்டாம் மரணத்தில் மரிக்கிறவர்களும் முற்றிலுமாக அழிந்து போவார்கள், நிர்மூலமாவார்கள்.

ஆனால் முதல் மரணத்திற்கு அதைப் பயன்படுத்தினால் அது தவறாக இருக்கும். தேவன் நன்மையானதை கொடுத்திராவிட்டால் மிருகத்தைப் போலவே மனிதனும் அழிந்து போகிறான் என்று நாம் கூறலாம். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று நமது முதல் பெற்றோரிடம் உறுதியளித்திருக்கிறார். இப்படியாக எதிர்கால ஒரு மீட்பைக் குறித்து அவர் தெளிவற்ற ஒரு வாக்குத்தத்தத்தை கொடுத்தார். நிர்மூலமாக்குதலில் இருந்து மீட்பே கிடையாது. அது எல்லா நம்பிக்கைகளுக்கும் முடிவாக இருக்கிறது.

-----------------------